SRI S. K. SAMBANDHAN : Fourteen pice is the average sale price. It is the consumer price. They have given data here for so many things, and I am able to find out the average price here. It may not be cheap there when compared to the cost of living. The Hon. Minister should bear in mind that they work on fuel oil and

not on hydro-electric system. We are going to work on the lignite that is being dug in our own State. When we get the atomic energy, will it be possible for the Government to give electricity at a cheaper rate or at a higher rate? I want to know this from the Government. If it is to cost us more, it would be better we go in for two more thermal stations than have an atomic energy plant.

SRI O. P. RAMASWAMI REDDIAR : It would be costlier.

SRI S. K. SAMBANDHAN : The establishment of an atomic plant is costly, and the maintenance of it will be very costly. When this comes to our State, the consumers will have to pay much more. Even now I say they are paying more. Why should we go in for a thing that will cost us more definitely? Is it not feasible to go in for one or more thermal stations that will work on lignite or on coal that we get from Calcutta before we think of atomic plant.

Sir, these are the points I want to tell the Hon. Minister. I request him to direct the department to avoid this red-tapism and the delay in the sanction of works. I have got instances to show that service connections for agricultural purposes have not been given for two years. The Hon. Minister should do something here. Thank you, Sir.

3–50 p.m. * SRI A. SUBRAMANYAM : கனம் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மின் சக்தி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்ட மின்சக்தி குழுவின் வரவுசெலவுத் திட்டத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். இதற்காக கனம் அமைச்சர் அவர் களுடைய சேவையைப் பாராட்டி நான் புகழ்கிறேன். ஏனெனில் இந்தப் பரந்த பாரத தேசத்திலேயே நல்ல ஒரு திட்டத்தை மின் சக்திக்காகப் போட்டு அந்த மின் சக்தியைவிட அதிக விரைவிலே அமைச்சர் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று அதிகமான தன் சக்தியைக் கொடுத்திருக்கிறார் என்பதைக் கேட்டு நாமெல்லோரும் பெருமகிழ்ச்சியடையாமல் இருக்கமுடியாது. பல ஆண்டுகளுக்கு முன்பு நம் தேசத்திலுள்ள கவிவாணர்களும் இன்னும் மற்றவர்களும் கிராமங்களில் இரவில் கட்டிலில் படுத்துக்கொண்டு அண்ணாந்து வானத்தை நோக்கி இந்த நட்சத்திரங்களையும் நிலவையும் பார்த்து விட்டு அவை மின்னுகிற ஒளியும் நிலவின் வெளிச்சத்தையும் பாருங்கள் என்று கவிதையிலே குறிப்பிட்டு எழுதி வியந்தார்கள். கற்பனையிலே அதைக் கண்டு பாடல்கள் புனைந்து பாடி வந்தார்கள். ஆனால் இன்றையதினம் ஒவ்வொரு கிராமத்தையும் நினைக்கும் போது ,அம்மாதிரியான ஒரு கற்பனையாக இருந்ததெல்லாம் மறைந்து வீதிகளிலெல்லாம் கிராமங்களிலெல்லாம் ஜகஜ்ஜோதி யாக ஜொலிக்கிறது. பெரிய டியூப் விளக்குகள், சந்திரன் போன்ற வட்டவடிவமான விளக்குகள் நட்சத்திரங்கள் போன்ற விளக்குகள் ஒளி வீசுவதைக் காணுகிறோம். இந்தமாதிரி தமிழ் நாட்டில் மின்சக்தி பரவி விளங்குகிறது. குறிப்பாக, மத்திய அரசாங்கத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையும், பெருமளவில் 30

23rd August 1961] [Sri A. Subramanyam]

கோடி ரூபாயை மூன்றுவது திட்டகாலத்திற்கு ஒதுக்கப்பட்டிருப் பதையும் அதைச் செலவு செய்ய திட்டம் வகுத்திருப்பதையும் நாம் போற்றுமல் இருக்கமுடியாது. குறிப்பாக இந்தக் காரியங்கள் செய்யும்போது கொஞ்சம் தடைகள் ஏற்படலாம். கொஞ்சம் நிதானமாக செய்யக்கூடியதாக இருக்கலாம். இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். சேலம் ஜில்லாவில் தர்மபுரி தர்லுகா என்பது மிகவும் பிற்போக்கான தாலுகா. அத்தாலுக்காவில் பெண்ணுகாம் தொகுதி மிகவும் பிற்போக்கான தொகுதி. காடுகள் வனந்திரங்கள் அங்கு அதிகம். அங்கு துஷ்ட மிருகங்களும் அதிகம். அங்கு பற்பல இடங்களில் கிராமவாசிகள் மிக சிரமத்துடன் இருண்ட இடங்களில் இருக்கும்படியான நிலைமையில் இருந்துவருகின்றுர்கள். அந்தமாதிரி இடங்களை முதலில் கவனித்து அங்கு முதல் சலுகை கொடுத்து மின்சக்தி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுகூட இந்த மின்சக்தி ஏற்படு வதற்குத் திட்டங்கள் வகுத்து அதைச் செய்யவேண்டுமென்று முன்வந்தாலும், குறித்த நேரத்தில் குறிப்பிட்ட காலங்களில் அவர் களுக்கு வேண்டிய தளவாடங்கள் சரியான வகையில் கிடைப்ப தில்லை. மரங்கள் வெட்டி அதற்காக கம்பங்களையெல்லாம் கொண்டுவந்து போட்டுவிட்டாலும்கூட, விளக்கு எரிவதற்கு சில உப பொருள்கள், கருவிகள் கிடைப்பது இல்லை என்பதாகச் சொல்லி வேலை நடக்காமல் நின்று விடுகிறது. இந்த மாதிரிச் சில தவறுகள் சில சமயங்களில் ஏற்படுகின்றன. இந்தக் காரியங்கள் நடைபெறுமல் இருக்கும் தடைகளை நீக்கி, சாமான்கள், கருவிகள் காலாகாலத்தில் கிடைக்கச் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு எல்லோரும் இந்த விஷயத்தில் பாராட்டிப் பேசினுலும் நல்ல விஷயம் நன்றாக நடக்கிறது என்ற நிலையில் நானும் சில வார்த்தைகள் கூறி அதைப் பாராட்டி என் வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* Sri K. V. RAMASWAMY: கனம் தலைவர் அவர்களே, இப்போது சர்க்காரால் கொண்டு வரப்பட்ட நமது எலக்ட்ரிஸிட்டி மானியத்தைப் பாராட்டி நான் பேச கடமைப்பட்டிருக்கிறேன். இது மிக முக்கியமான விஷயம். கரண்ட் என்பது எல்லோரும் பாராட்டக்கூடிய ஒரு விஷயம். அதிலும் விவசாயிகளுக்கு இது ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்தது. இன்று விவசாயம் செய் வதற்கு கரண்ட் இல்லையென்றுல் இன்றைய நிலைமையில் விவ சாயம் செய்யவே முடியாது. அதிலும் எங்கள் கோவை ஜில்லாவில் நீங்கள் பார்த்தால் இரண்டு பம்பு செட்டுகள் வைத்துத்தான் தண்ணீர் எடுக்கவேண்டும். கீழே ஒரு பம்புசெட் வேலை செய்யும். அதை மேலே எடுத்து ஊற்றுவதற்கு இன்னொரு பம்புசெட்டு வேலை செய்துகொண்டிருக்கும். இந்த நிலைமையில் எவ்வளவு ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது எலக்ட்ரிசிட்டி என்று ஒன்று இல்லாவிட்டால், விவசாயி என்ன செய்வான் என்று சொல்லமுடியாது. கபலை போட்டு இறைப்பது என்றுல்

பெரிய பெரிய மாடுகள் வைத்து—சுமார் ஒரு ஜோடி ரூ. 1,500-க்கு மேற்கொண்டு பெறுமானமுள்ள மாடுகள்—வைத்து இறைத்தால், ஒரு மணிக்கு எவ்வளவு தண்ணீர் எடுக்க முடியும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும், அதாவது, 100 அடிக்கு மேற்கொண்டு ஆழம் இருக்கக்கூடிய இடத்தில் ஒரு முறையில் 4 பக்கெட்டுகள் வந்துசேரும். அதுகூட நிலத்திற்குப் போய் சேருவதற்குள் வற்றிவிடும். இந்த நிலையில் தான் அங்கு இருந்து கொண்டிருக்கிறது. இப்போது கரண்ட் வந்தபிறகு, குடியானவர்களுக்கு நல்ல முறையில் விவசாயம் செய்ய முடிகிறது. அதிலும் சில கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. விவசாயிகளுடைய வறுமையையும் சிரமங்களையும் கண்டு அதற்கான வசதிகள் செய்துகொடுக்கவேண்டும். அது அரசாங்கத்தின் கடமை. அதிலும் நமது மின்சார அமைச்சர் அவர்கள், நண்பர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல, கிராமம் கிராமமாகச் சென்று விவசாயிகளுடைய குறைகளை நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் அவர்களுக்கு அதிகமாக எடுத்துச் சொல்லவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். இருந்தபோதிலும் என்னுடைய கடமை நான் சொல்ல வேண்டியது. விவசாயத்திலே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் விவசாயத் தொழிலாளர்கள் கிடைப்பது மிகமிக அரிதாக இருக்கிறது என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். நாம் இன்று விவசாயத்தொழிலை அபிவிருத்தி செய்வதுதான் முக்கியம். இன்று விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் என் போன்றவர்களுக்கு அதன் கஷ்டம் நன்றாகத் தெரியவருகிறது. அதை இந்த சபை முன் சமர்ப்பிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால், விவசாயம் முன்னேற முடியாது. ஏன் அதைச் சொல்கிறேன் என்றால், இன்று விவசாயத் தொழிலாளர்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைச் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். விவசாயத் தொழிலிலே இருக்கக் கூடிய ஒருவன் முன்பு நல்ல முறையில் வேலை

4-00 p.m. செய்து கொண்டு வந்தான். இப்போது இந்த மாதிரி எல்லாம் இல்லை. அவர்கள் குறிப்பிட்ட நேரம்தான் வருவார்கள். குறிப்பிட்ட நேரப்படி கூட வருவதில்லை. 8 மணி என்றால் 9-க்கும், 9 மணி என்றால் 10-க்கும் வருவார்கள். ஏன் இப்படி நேரம் கழித்து வந்தாய் என்றால், அடுத்தநாள் வரவேமாட்டான். பண்ணையிலே மாதச்சம்பளத்தில் அமர்த்தக்கூடியவர்களுக்கு மாதம் குத்தகையாக இவ்வளவு படி, பணம் என்று பேசி அமர்த்துகிறோம் என்று சொன்னால், அவனுக்கு ரூ. 200 அட்வான்சாகக் கொடுக்கவேண்டும் முதலிலே. அடுத்தபடி அவனுக்கு ஒருமாடு வைத்துக் கொள்ளுவதற்கு வசதி வேண்டும். நம் மாட்டுக்குத் தீனி இல்லா விட்டாலும், அவன் மாட்டுக்குத் தீனி போட்டுக் கொள்ளுவான். இந்த நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல் தினசரிக் கூலி ஆட்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், அது நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வருகிறது. கூலியும் ஏறிக் கொண்டு வருகிறது. காரணம் ஒவ்வொருவரும் மற்ற

தொழில்களில் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர, விவசாயத்தை நாடுவதில்லை. மில்லுக்குப் போனால் அதிகமாகக் கூலி கொடுக்கிறார் கள். மில் கேட்டிலே 'வாச்மேன்' வேலையானாலும்கூட, நிறையச் சம்பளம் கிடைக்கிறது. விவசாயக் கூலியாகப் போனால், ரூ. 1¼, 1½ இப்போது ரூ. 1¾ வரை கூலி. அந்தக் கூலிகளை எல்லாம் கொடுத்துக் கணக்குப் பார்த்தால், ரொம்பவும் கஷ்டமாக இருக் கிறது. இன்றைக்குப் பெண் தொழிலாளிகள் காலை 7½ மணிக்கு வருகிறார்கள். ஒரு மணிக்கு அவர்கள் வேலையை முடித்து விடு கிறார்கள். கூலி ஒரு ரூபாய். இதற்கிடையில் சாப்பாட்டுக்கு 1 மணி நேரம். நடுவிலே 1-க்கு, 2-க்கு வெற்றிலை போட வீண் பேச்சு பேசுவது வேறே. இதை எல்லாம் வைத்துக் கொண்டு எவ்வளவு நேரம் வேலை செய்வார்கள் என்று கணக்குப் போட்டுக்கொள்ளுங்கள். ஒரு மணிச்சங்கு ஊதினால், அப்படியே வைத்துவிட்டுப் போய்விடுவார்கள். பிறகு வேலைக்கு ஆள் இல்லை. இந்த மாதிரியான நிலைமை இப் போதும் இருந்து கொண்டிருக்கிறது. விவசாயக் கூலிகள் அதிக மாகக் கிடைக்க முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறபடியால், விவசாயம் வளர முடியாது என்பதைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன். இந்த நிலைமையில் இரவு நேரத்திலே வேலை செய்வது என்று சொன்னால் எந்தத் தொழிலாளி வந்து வேலை செய்வான் என்பதுதான் விளங்கமாட்டேன் என்கிறது. இர விலேதான் தண்ணீர் பாய்ச்ச கரண்ட் சப்ளை செய்ய முடியும் என்றால், எப்படி, யார் போய் வேலை செய்கிறது, மாட்டுக்குத் தீனி போடக்கூட அவனவன் கிட்டே இருந்து கொண்டு வேலைசெய்தால் தான் முடிகிறது. இல்லாவிட்டால் மாடு வயிறு நிறையாது. மாடு வைத்துக் கொள்ள முடியாது. விவசாயிகளின் நிலைமை இம் மாதிரி இருக்கிறது. இந்தத் தண்ணீர் இறைவைக்குக் கரண்ட் பகலிலே கொடுக்கவேண்டும். இரவிலே கொடுப்பதால் பல கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு ஆள் வேலை செய்ய வந்தால்கூட அவன்கூட தண்ணீரை வெட்டி விட்டு தூங்குவான். "ஏன் தூங்கினாய்" என்று கேட்டால், "தூங்காத ஆளைப் போட்டுக் கொள்" என்று போய் விடுவான். அடுத்தநாள் அந்த ஆளும் இல்லை. இந்தமாதிரி நிலைமைதான் விவசாயத்தில் இருக்கிறது. ஆகவே நான் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றத் தொழில்கள் இரவில் லைட் போட்டுக்கொண்டு செய்யலாம். இரவிலே விவசாயத்தில் பயிருக் குள்ளே போய்த் தண்ணீர் கட்டுவது என்றால், முடியாத காரியம் கட்டுவதற்கும் வசதி இல்லை. அந்த நிலைமையிலே இருக்கிற காரணத்தால் விவசாயிகளுக்கு அத்தியாவசியமாகப் பகலிலே தான் அந்த கரண்ட் சப்ளை செய்ய வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குச் சில இடங்களில் தண்ணீர் இருக்கிறது, சில இடங்களில் தண்ணீர் இல்லாமல் இருக் கிறது. தண்ணீர் இல்லாவிட்டாலும் மினிமம் சார்ஜ்

கட்டியாக வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு பட்ஜட் போதும் சொல்லிக் கொண்டு வருகிறேன். நான் அனுபவத்தில் காட்டிக்கொண்டு வருவதைச் சொல்லிக் கொள்ளுகிறேன். கிணற்றில் தண்ணீரை வைத்துக் கொண்டு ஓட்டாமல் இருக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் இல்லை. ஒரு பொட்டுத் தண்ணீர் இருந்தால்கூட அதை உறிஞ்சி உறிஞ்சி கரண்ட் இருக்கிற வரைக்கும் இழுக்கிறோம். ஆனால் கரண்ட் சப்ளை இருந்தும்கூட தண்ணீர் இல்லை. மினிமம் சார்ஜ் கட்டியாக வேண்டும். இது ரொம்ப அநியாயம். ஏனென்றால் கீழே இன்னும் ஆழமாக வெட்ட முடியாது. பெரும்பாறை பக்கத்திலே பணக்காரர் ஏக ஆழத்துக்கு வெட்டியிருப்பார். அவ்வளவு ஆழமாகத் தோண்டமுடியாது. இந்த நிலைமையில் கரண்ட் சார்ஜ் கட்டியாக வேண்டும் என்றால் என்ன செய்வது என்றே விளங்கவில்லை. என்ன செய்வது என்று ஆண்டவன்கிட்டே நான் முறையிட்டுக்கொண்டு இருக்கிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: எங்களிடம் சொல்லுங்கள்.

SRI K. V. RAMASWAMY: மந்திரி அவர்கள் இடமும் சொல்லி இருக்கிறேன். இந்தமாதிரிப் பல கஷ்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. மினிமம் சார்ஜ் என்பதை அறவே ஒழிக்க வேண்டும். ஏனென்றால் தண்ணீர் இருந்து ஓட்டாமல் இருந்தால், மினிமம் சார்ஜ் வாங்கவேண்டியது அவசியம். கஷ்டப்பட்டு கடன் வாங்கி, கிணறு வெட்டி, இருக்கிற தண்ணீரை உபயோகப் படுத்தாமல் இருக்கிறது கிடையாது. ஆகையினால் இந்த மினிமம் சார்ஜை அறவே ஒழித்துக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடி, மற்றத் தொழிற்சாலைகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற யூனிட் சார்ஜைவிட விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற சார்ஜானது அதிகமாக இருக்கிறது. ஏன் இந்த ஒரு குறை? பக்கத்திலே மில் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய ஒருவருக்கு 5 பைசா போட்டு, இவர்களுக்கு 9, 10 பைசா போட்டால், நமக்கு அதிகமாகப் போட்டுவிட்டார்கள். அவர்களுக்கு குறைவாக இருக்கிறது என்ற மனப்பான்மைதான் வருமேதவிர, அவர்களுக்குச் சந்தோஷம் இருக்காது. விவசாயத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட நம்முடைய சர்க்கார், விவசாயத்துக்குக் கொஞ்சம் அதிகமாகக் குறைத்து, மற்றத் தொழில்களுக்கு அதிகமாகப் போட்டாலும் பரவாயில்லை என்பது தான் என் தாழ்மையான அபிப்பிராயம். அந்த முறையிலே சர்க்கார் வேண்டுவன செய்ய வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

இன்னொரு குறை முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், கரண்ட் ஒரு கிராமத்துக்குப் போகிறது என்றால், அந்தக் கிராமத்திலே எப்படிப் போய்ச் சேருகிறது, சப்ளை எப்படி வருகிறது என்றால், ஒருத்தனுக்கு சப்ளை வருகிறதற்குள்ளே எவ்வளவு பணம் செலவழிக்கிறான், யார் யாருக்குச் செலவழிக்கிறான் என்பதை அலசி அலசிப் பார்த்தாக வேண்டும். இது

23rd August 1961] [Sri K. V. Ramaswamy]

ரொம்பக் கேவலமாக இருக்கிறது. நம்முடைய சர்க்காருக்கே இது அவமானமாக இருக்கிறது. ஏன் என்று சொன்னால், நம் சர்க்கார் நடக்கிற இடத்தில் சர்க்கார் ஊழியன் லஞ்சம் வாங்கி இந்தத் தொழிலைச் செய்கிறான் என்றால், அதைக் கண்டிப்பாகக் கண்டு பிடித்தாகவேண்டும். இதனால் என்ன நஷ்டம் வந்தாலும், பாது காப்புக்கு ஏற்பாடு பண்ணிப் பிடிப்பதற்கு அதிகச் செலவு செய்தா லும் பரவாயில்லை. மக்கள் சர்க்கார் நேர்மையாக நின்று, லஞ்சலா வணம் நின்று போய்விட்டது என்ற புகழை எடுத்துக் கொள்ள வேண்டும். யாரைக் கேட்டாலும், எதற்குப் போனாலும், "சும்மா வந்து, வரலையா, வரலையா என்று கேட்டால் என்ன செய்வது"— இந்த மாதிரி அசிங்கமான முறைகள் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. சகிக்க முடியாமல் நான் பேசுகிறேன். நாம் எல்லாம் அதிகாரம் வாங்கியது எதற்காக? சுதந்திரம் பெறப்பட்ட கஷ்டம் என்ன? மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டுமென்று பெற்றோம். சுதந்திரமான நாட்டிலே சில ஊழியர்கள் சட்டத்தை மீறி, சர்க் காரை மீறி அவமதித்து தங்களுடைய வாழ்க்கையை ஒரு சின்ன மாக எண்ணாமல் ஏதோ ஒரு மிருகத்தனமான முறையில் நடந்து கொண்டு இருக்கிறார்கள் என்றால், அதைக் கண்டிக்காமல் இருந் தால் நாம் சட்டசபையில் இருந்து பிரயோசனம் இல்லை. ஆட்சி புரிந்து பிரயோசனம் என்ன என்று எனக்கு விளங்கவில்லை. இதைக் கண்டிப்பாக இந்த நாட்டிலே இருந்து அறவே ஒழித்தாக வேண்டும். இது மிக முக்கியம். இதைப்பற்றி ஜோசியம் கேட்க வேண்டாம். கண் முன்னாலே நடக்கும் காரியம். ஒவ்வொரு இடத்திலேயும் நடக்கிறது. நம் சர்க்கார் என்று மறைத்து வைத்தும் பேச முடியாது. ஆகவே, இந்த விஷயத்திலே அதிக மான கவனம் செலுத்தி பரிகாரம் தேடிக்கொடுத்தாகவேண்டு மென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இதேபோல் 4-10 p.m. சில இடங்களில் கரண்ட் கம்பங்கள் நட்டு வெகுகாலமாக இருக் கின்றன. அதில் சில இடங்களில் கரண்ட் கொடுக்காமல் கூட இருந்துகொண்டிருந்தது. அப்படியிருந்த கிராமங்களுக்கு மந்திரி அவர்கள் போய்ப் பார்த்து உடனடியாக உதவி செய்ததைப் பற்றிக் கேள்விப்பட்டோம். இப்போதெல்லாம் அங்கு போனால் ராமையா என்று சொன்னதுமே, 'வாருங்கள் ஐயா' என்று கூறும் நிலைமையில் அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். அதைக் கண்டு நாம் பெருமைப்படாமல் இருக்கமுடியவில்லை. ஆகையால் இப்போதுள்ள இந்தக் குறைபாடுகளையெல்லாம் அவர்கள் காலத்தி லேயே நீக்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைப்போல எலக்ட்ரிக் சாமான்கள் விவசாயிகளுக்கு நல்லபடியாகக் கிடைப்ப தில்லை. ஆகையால் சர்க்காரிலிருந்து கூட விவசாயிகளுக்கு நல்ல முறையில் அந்த சாமான்களை வாங்கிக்கொடுத்து உபயோகிக்கச் செய்தால், ரொம்ப சௌகரியமாக இருக்கும். கிராமத்திலிருந்து போகும் ஒருவன் கடையில் போய் ஒரு சாமானுக்கு என்ன விலை யென்று கேட்டால், அவர்கள் சொன்ன விலையைத்தான் பேசாமல் கொடுத்துவிட்டு வரவேண்டியதாக இருக்கிறது. அவனுக்கு

மார்க்கெட் விலை தெரியாது. அவனுக்கு வேலை அவசரம். ஆகையால், சர்க்கார் குடியானவர்களுக்கு வேண்டிய மிக முக்கியமான பொருள்களை, சர்க்கார் கிடங்குகள் ஏற்படுத்தி, அதன்மூலம் கொடுத்து உதவ வசதிகள் செய்தால், குடியானவன் கஷ்டம் ஓரளவு நிவர்த்தியானதாகக் கருதப்படும். மேலும் பகலும் இரவும் விவசாயிகளுக்குக் கரண்ட் அவசியம். பகல் நேரத்தில் கரண்ட் கொடுப்பது மிக அவசியம். இரவில் கொடுப்பது என்று சொன்னால், நெல் வயல்களாக இருந்தால் மடை திறந்ததும் நீர் பாய்ந்துகொண்டு இருக்கும். மற்ற தானியங்களுக்கு ஒரு பாத்திக்கு ஒரு மடை பார்த்தாகவேண்டும். இருண்ட நேரத்தில் விவசாயி அதைப் போய் நீண்ட பயிருக்குள் பார்த்து எப்படி நீர்ப் பாய்ச்ச முடியும்? கரும்பு முதலிய பயிர்கள் உள்ள இடங்களில் உள்ளே போய் இரவில் தண்ணீர் பாய்ச்சுவது கஷ்டமான காரியம். இப்போது ஸ்பெஷல் சர்சார்ஜ் மூன்று மாதத்திற்கு முதலிலேயே கொடுக்கவேண்டுமென்றும் மிகவும் சிக்கலாகவும் நிர்வாகத்தை வைத்துக்கொண்டிருந்தால் விவசாயி என்ன செய்வான்? ஆபீஸ்களில் போய் நின்றுகொண்டு சாப்பாடு இல்லாமல் வெயிலிலும் மழையிலும் காத்துக்கொண்டு இருப்பதைப் பார்த்தால், அந்தக் கஷ்டத்தை நம்மால் சொல்லவே முடியாது. அதைப் போக்க வேண்டும். இதுபோன்ற வசதிகளைச் செய்துகொடுத்து விவசாயினுடைய குறைகளைப் போக்கி அவர்களுக்கு உதவவேண்டுமென்று சொல்லி எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI M. ETHIRAJALU: சேர்மென் சார், மின்சார வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் சர்க்காருக்கு நன்றி தெரிவிப்பதற்கு முன்னதாக நமது ராஜ்யம் இவ்வளவு தூரம் முன்னேறியிருப்பதற்கு உதவி செய்த கனடா சர்க்காரையும் சோவியத் யூனியன் சர்க்காரையும் பாராட்ட வேண்டியது நம் கடமையாகும். அது நமது சட்ட மன்றத்தின் கடமையும் கூட. ஏனென்றால் குந்தா மின்சாரத் திட்டம் முதல் இரண்டு கட்டங்களும் முடிவடைவதற்கு வேண்டி ரூ. 12 கோடியும் கொடுத்து, மூன்றாவது கட்டத்திற்கு ரூ. 11 கோடியும் இப்போது கொடுப்பதற்கு கனடா சர்க்கார் முன்வந்திருக்கிறது. அதே நேரத்தில் மேட்டூர் டன்னல் மின்சாரத் திட்டத்தை அமைப்பதற்கு சோவியத் யூனியன் சர்க்கார் முன்வந்திருப்பதை நாம் பாராட்டவேண்டும். அவர்களுடைய முழு ஒத்துழைப்பினால் தான் நமது மாநிலம் இன்றைக்கு மின்சார உற்பத்தியில் இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. என்றாலும் கூட மற்ற மாநிலங்களைவிட கிராமத்தில் மின்சாரம் கொடுத்திருப்பதில் தமிழ்நாட்டு அரசாங்கம்தான் முதல் ஸ்தானம் பெற்றிருக்கிறது. இந்த மின்சார பட்ஜெட்டைப் பார்க்கும்போது, சென்ற ஆண்டு நாம் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் மனதில் கொண்டுதான் இந்த வருஷம் விவசாயிகள் முன்னேற்ற அடிப்படையிலே, இந்த ரிபோர்ட் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு அமுல்

நடத்தப்பட்டு வருகிறது என்பது நன்ருகத் தெரிகிறது. விவசாயி களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நன்மைகளை முதலாவதாக எடுத்துக் கொண்டு பார்த்தால், எத்தனையோ கஷ்டங்கள் அவர்களுக்கு இருந்தாலும்கூட, ஓரளவு காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும்கூட, மின்சாரத் துறையில் ஏற்பட்டிருக்கிற நன்மைகளைப் பெற்று அதன் மூலமாக சுபிட்சப் பாதையில் செல்வதற்கு அது உதவு கிறது. குறிப்பாக இப்போது டிஸ்ட்ரிபியூட்டிங் மெயினிலிருந்து 100 அடிக்கு அப்பாற்பட்ட இடத்திற்குக் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்ருல் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. விவசாயி கள் கிணற்றில் தண்ணீர் இல்லையென்ருல், அதற்கு மினிமம் சார்ஜ் கட்டவேண்டுமென்று முன்னிருந்தது. அதை அனுபவத்தில் பார்க்கும்போது, அதற்குக்கூட ஒரு விசேஷத் தொகை தள்ளுபடி செய்யக்கூடிய நிலையில் மின்சார இலாகா முன் வந்திருக்கிறது என்பது பாராட்டத் தக்கது. கிணற்றில் தண்ணீர் வறண்டுபோய் முழு அளவுக்கு மின்சாரம் உபயோகிக்காவிட்டாலும்கூட, அதற் கும் விசேஷத் தொகை தள்ளிக் கொடுக்கிருர்கள். மின்சாரம் சரியாகக் கிடைக்காமல், பம்பு செட்டை எடுத்துவிட்டபின்கூட, கனெக்ஷன் ரத்து செய்யப் படுவதில்லை. இப்படி மின்சாரத்துறை விவசாயிகளுக்கு நல்ல முறையில் செயலாற்றி வருகிறது என்பதை நாம் மறக்கமுடியாது. அதுமட்டுமல்ல. இன்றைக்கு இருக்கும் அட் ஹாக் கமிட்டி மூலமாக வந்த ரிபோர்ட்படி குரூப்பிங் சிஸ்டம் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று அறிந்து அதை நீக்குவதுபற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டிருக்கிருர்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது என்று குரூப்பிங் சிஸ்டத்தை எடுத்துவிட் டார்கள். அதேபோல சேலத்திலும் குரூப்பிங் சிஸ்டம் நீக்கப்பட் டுள்ளது. அதனல் இருந்த கஷ்டங்கள் விவசாயிகளுக்குக் குறைந்திருக்கிறது. அட் ஹாக் கமிட்டி சொல்லியிருக்கும் மின் சார வசதியில்லாத பின்தங்கிய ஜில்லாக்களுக்கு இப்போது என்ன சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அட் ஹாக் கமிட்டி என்ன ரிபோர்ட் கொடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 6 கோடி ரூபாய் வருட வாரியாகச் செலவு செய்தார்கள். இரண்டாவது திட்டத்தில் ரூ. 15 கோடி வருடவாரியாகச் செலவு செய்திருக்கிருர் கள். இரண்டாவது திட்டத்தில் ரூ. 15 கோடி செலவு செய்து தான், ஏறக்குறைய 3,500 கிராமங்களிலிருந்து 10,700 கிராமங்கள் வரை மின்சாரம் கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு 8,000 கிராமங்களுக்கு மூன்ருவது திட்டத்தில் மின்சாரம் விஸ்தரிக்கப் படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் நடைமுறை யில் பார்க்கிறோம். பம்புசெட் விஷயத்தில்கூட இரண்டாவது திட்ட முடிவில் 1,16,000 செட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மூன்ருவது திட்டத்தில் 75,000 பம்புசெட்டுகள் கிடைக்குமென்றும், 8,000 மைல்களுக்கு ஹைடென்ஷன் லைன்கள் அமைக்கப்

படுமென்றும், உறுதி கூறப்பட்டிருக்கிறது. இதுபோன்று தமிழகத்தில் மின்சாரம் மின் வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் மூன்ருவது திட்டத்தில் முக்கியமாக மேட்டூர், டன்னல் மின்சாரத் திட்டம், ஆரளியாறு பரம்பிக்குளம் திட்டம் எல்லாம் எடுத்துக் கொள்ளப் போகிறோம். அப்படி எடுத்துக் கொண்டாலும் பற்ருக்குறை வந்துகொண்டே இருக்கிறது. வருஷவாரியாக கோடை காலத்தில் வந்துகொண்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முதலில் 5 லட்சம் கிலோவாட்தான் உற்பத்தி செய்ய முடிந்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் 5 லட்சம் கிலோவாட் உற்பத்தி செய்ய முடியும். பத்து லட்சம் கிலோவாட் உற்பத்தி செய்தாலும்கூட, பற்ருக்குறை இருந்துதான் தீரும் என்று அமைச்சரே சொல்லியிருக்கிருர்கள். அதே நேரத்தில் தமிழ் நாட்டில் தென் ஆற்காடு ஜில்லாவில் நெய்வேலியில் தெர்மல் ஸ்டேஷன் மின்சக்தி உற்பத்தி செய்கிற நேரத்தில் 2½ லட்சம் கிலோவாட் உற்பத்தி செய்யும் என்று சொன்னுர்கள். ஆனல், இப்போது 4 லட்சம் கிலோவாட் உற்பத்தி செய்ய முடியும் என நம்பப்படுகிறது. எடுத்துக்கொண்ட பிறகு மீதி 2·16 லட்சம் கிலோவாட் தமிழ் நாட்டுக்குக் கொடுக்க முடியும் என்று சொல்லுகிற நேரத்தில், நாம் ஓரளவு பற்ருக்குறையை சமாளிக்க முடியும் என்று உறுதி கூறப்படுகிறது. ஆகவே, நமது தமிழ் நாட்டின் இன்றைய பற்ருக்குறை வருஷவாரியாக நீக்கப்படும் என்பதிலே இந்த இலாகாவைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியை ஓரளவுகூட சந்தேகிக்க வேண்டியதில்லை. ஏனைய ராஜ்யங்களைவிட இந்த ராஜ்யத்திலே மின்சாரத்துறை சிறந்த முறையில் நடக்கிறது என்பதை யாரும் எந்தக் கட்சியினரும் மறுக்க முடியாது. ஆனல், அதே நேரத்தில் இந்த இலாகாவினரால் விவசாயிகளுக்கு ஒருசில கஷ்டம் இருக்கலாம். எந்த இலாகாவிலும் இதேமாதிரி இருக்கிறது. ஆனல் இது அன்ருடத் தேவைக்கு ஒவ்வொரு வீட்டாருக்கும் உபயோகப்படுகிற இலாகாவாகப் போய் விட்டது. விரிவான அளவில் அது எல்லோருக்கும் தெரியும் நிலையில் வந்துவிட்டது. அதை எல்லாம் அவ்வப்போது கண்டு சீர்திருத்த வேண்டியது இலாகாவினரின் பொறுப்பு. மற்ெருரு விஷயம்கூட இருக்கிறது. அதைக் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கிவிடவேண்டும். இதை ஒரு கார்ப்பொரேஷனக்கி இருக்கிறது. சர்க்காருக்கும் கார்ப்பொரேஷனுக்கும் நெருங்கிய உறவு இல்லாத காரணத்தால் எப்படி வேண்டுமானலும் நடக்கலாம் என்று அதிலே வேலை செய்பவர்கள் நினைக்கலாம். அப்படி நினைப்பது தவறு. அதேபோல் கம்பெனியில் வேலை செய்தவர்களுக்கும் இருந்தது. கம்பெனியை எடுத்து கார்ப்பொரேஷனுக்கு மாற்றிய பிறகு அந்த எண்ணம் மாறி எவ்வளவு சலுகை இருந்ததோ அதை மறந்து சேர்ந்து விட்டதைப் போல அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது இன்னும் சில கம்பெனிகளுக்கு, கிராமங்களுக்கெல்லாம் மின்சாரத்தைப் பெருக்கவேண்டும் என்று ரூ. 20, 25 லட்சம் என்று

23rd August 1961] [Sri M. Ethirajalu]

கொடுக்க வேண்டுமென்று இந்த வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்னதாகவே கேட்டுக்கொண்டிருக்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக இப்போது இருக்கக் கூடிய எட்டு கம்பெனிகளையும் எடுத்து மின்சார இலாகாவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் அவர்கள் ஏகபோக பாத்தியமாக நடக்கிறார்கள். அவர்கள் பொது ஜனக் குறைகளைக் கவனிப்பதில்லை. குறைகள் கவனிக்கப்பட வேண்டுமானால், கம்பெனிகளைப் படிப்படியாக எடுத்துவிட வேண்டும். கம்பெனிகள் இருக்கக்கூடாது என்பதுதான் என் கோரிக்கை. அதோடுமட்டுமல்ல குரூபிங் சிஸ்டத்தில் இருக்கக் கூடிய கஷ்டத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறபோது பின்தங்கிய ஜில்லாக்களில் கூட உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

THE HON. SRI V. RAMAIAH : குரூபிங் சிஸ்டம் வேண்டுமா ?

SRI M. ETHIRAJALU : அதை எடுத்துவிட வேண்டும் என்றுதான் நானும் கேட்டுக்கொள்ளுகிறேன். நமது மாநிலத்தில் தென் ஆற்காடுதான் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படுவதில் மிகவும் பின் தங்கி இருக்கிறது. சென்ற வருஷத்தில்கூட எடுத்துக் காட்டினேன். இப்போது என்னிடம் அதற்கான புள்ளிவிவரம் இல்லை. அப்போது சொல்லியிருக்கிறேன், தனி கவனம் செலுத்தப்படும் என்றும் விசேஷச் சலுகை தென் ஆற்காடு ஜில்லாவுக்குக் காட்டப்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் இப்போது மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற ஜில்லாக்களில் எல்லாம் 900, 1,000 கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் அதே நேரத்தில் தென் ஆற்காட்டில் 500, 550 கிராமங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு சென்ற வருஷத்தில் ஏதாவது ஒருக்கால் அதிகமாக இருந்தால் இருக்கலாம். விசேஷ கவனம் செலுத்தி இருக்கிறார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதோடு மற்றொன்று, தென் ஆற்காடு ஜில்லா விவசாயிகளுக்கு ஒருகுறை. நேற்றைய முன்தினம் விழுப்புரம் தாலூகாவிலிருந்து ஒருவர் என்னிடம் முறையிட்டார். குமினம் என்று ஒரு சிறிய கிராமம், அதில் 200, 300 பம்ப் செட்கள் மின்சாரத்துக்குத் தகுதியுள்ளதாக இருக்கின்றன. அதைக் கவனிக்கவில்லை. இரண்டு, மூன்று வருஷம் ஆகிறது. குறைகள் கவனிக்கப்படவில்லை என்று குறை கூறினார்கள். அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அதிலும் சீக்கிரம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, வீடுகளுக்குக் கொடுக்கும் மின்சார கனெக்ஷன் இருக்கிறதே, அதிலும் சென்னையில் இருப்பதற்கும் வெளியே இருப்பதற்கு வித்தியாசம் இருக்கிறது. சென்னையில் ஒரு மாதம் பணம் கட்டத் தவறிவிட்டாலும்கூட, 2, 3, மாதம் கழித்துக்கூட கட்டுகிறார்கள். சர்வீஸ் கனெக்ஷன் நிறுத்தப்படுகிறது இல்லை. மொபசலில் இருக்கிறவர்களுக்கு யார் பேரில் வீடு இருக்கிறது,

யார் பேரில் கனெக்ஷன் இருக்கிறது, யார் பேரில் பில்போட வேண்டும் என்று இருக்கிறதோ அவர்களுக்குத் தெரிவிக்காமலேயே, ஏதாவது வழியில் இருக்கிறவர்களிடம் பில்லைக் கொடுத்து விட்டுப் போகிறார்கள். யாரிடமாவது கையெழுத்து வாங்கிக் கொள்ளுகிறார்கள். நான் நேரிலேயே சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லியிருக்கிறேன். முதலில் கொடுக்க வேண்டிய நோட்டீஸ் கொடுக்கப்படாவிட்டாலும், கனக்ஷனை நிறுத்தப்போகிறோம் என்ற நோட்டீசையாவது அந்த வீட்டுக்கு உரியவர்களிடம் கொடுத்துக் கையெழுத்து வாங்கவேண்டும். அதுகூட கொடுப்பது இல்லை. திடீரென்று எரிகிற விளக்கை நிறுத்தி விடுகிறார்கள். விளக்கை ஏற்றுவது ரொம்பக் கஷ்டம், அணைப்பது சுலபம். வீட்டிலே விளக்கை நிறுத்தும்போது, சுலபமாக யாருக்கும் தெரியாமல் நிறுத்திவிட்டுப் போய்விடுவார்கள். இப்படிப் பல சம்பவங்கள் நடக்கின்றன. குறிப்பாக, தென் ஆற்காட்டில் கடலூர் நகரத்தில் இம்மாதிரி சர்வீஸ் கனெக்ஷன் நிறுத்தப்பட்டிருக்கிற வீடுகள் எவ்வளவு என்று பார்த்தால்கூட நன்றாக இருக்கும். நான் டிவிஷனல் எஞ்சினீருக்கு நேராக எழுதியிருக்கிறேன். கேள்வியாக இந்தச் சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறேன். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், வீடுகளுக்கு ஒருமுறைக்கு மறுமுறை போய்ச் சொல்லியும், பணம் கட்டவில்லை என்றால் கனக்ஷனை துண்டிப்பதுதான் நியாயம். தொழில் துறையில் மின்சாரத்தைக் கேட்பவர்களுக்கு மொபசிலில் இருக்கிறவர்களுக்கு நல்ல முறையில் சீக்கிரம் கிடைக்கவில்லை என்ற புகாரும் இருக்கிறது. சிறிய தொழிலை, குறைந்த பணத்தை வைத்து, நடத்துகிறவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் ஒன்று சொல்லுவேன். சென்னையில் இருக்கக்கூடிய மின்சார எஞ்சினீயரிடம் சொன்னால், அவர்கள் உடனடியாக நடத்திக்கொடுக்க முயற்சி எடுக்கிறார்கள். இதில் சந்தேகம் இல்லை. ஆனால் அங்கே அவர்களுக்குக் கீழே இருக்கக்கூடிய இலாகாவினர்தான் இன்னமும் சரியான முறையில் நடக்காமல், எப்படி எல்லாம் பதில் சொல்லி தப்பித்துக் கொள்ள முடியுமோ அந்த முறையில் பதில் எழுதும் நிலையில் இருப்பதை எல்லாம் சீக்கிரத்தில் சரிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு . . .,

SRI O. P. RAMASWAMI REDDIAR : அதெல்லாம் மின்சார போர்டு வந்ததால் வேறொன்றுமில்லை. அது ஸ்டாடியுடரி போர்டு.

SRI M. ETHIRAJALU : மின்சார போர்டு வேறு சர்க்கார் வேறு என்று நினைக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் இதிலே எல்லா பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மின்சாரத்தைக் கொடுப்பதன் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு பெரும் புகழ் பெற்று இருந்தாலும்கூட, சர்க்கார் வேறு, போர்டு வேறு என்ற எண்ணம் மாறி இரண்டையும் ஒன்றாக நினைத்து வேலை செய்தாலொழிய குறைகள் தீராது. நெய்வேலி நிலக்கரி என்றால் தென் ஆற்காட்டு M.L.A., M.L.C.-க்களுக்கு சம்பந்தம் கிடையாது. போய் பேச, கேட்கக்கூட முடியாது.

23rd August 1961]

SRI O. P. RAMASWAMI REDDIAR : கவர்ன்மென்டுக்கே கிடையாது, மற்றவர்களுக்கு என்ன ?

SRI M. ETHIRAJALU : முன்னால் அமைச்சர் உயர் திரு. ரெட்டியார் அவர்கள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி வரவேண்டும் என்று அக்கறை எடுத்துக்கொண்டவர்களுக்கே சம்பந்தம் இல்லை என்றால், அது கார்ப்பொரேஷன் we are under the control of the Central Government என்று சொல்லுகிறார்கள். நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. அந்த நிலையில் அமைச்சரவர்கள் அரசாங்கமும் கார்ப்பொரேஷனும் ஒன்று என்ற முறையில் இந்த இலாகா நடக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மின்னல் வேகத்தில் மின்சாரத்தைக் கொடுத்து, தொழில் துறையிலேயும், ஊடுருவிப் பாய்ந்து இந்த இலாகா தகுந்த முறையில் வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* SRI G. KRISHNAMOORTHY : Mr. Chairman, Sir, these are days of development of electricity. Everybody wants electricity. In fact, electricity is called our servant. Government have also been taking steps to extend electricity. Now for me to speak about the disadvantages of electricity may seem curious to many. There are advantages, but, at the same time, there are some disadvantages—disadvantages in the form of risks and Government must take precautions against these. I have no quarrel with the issue of licences for pumpsets. But, at the same time, they should not go to such an extent as to create unemployment of men and bulls. We are closely following in the footsteps of Mahatma Gandhi and in order not to create unemployment for bulls and men and not to create unnatural circumstances like those described by the hon. Member Sri Ramaswamy like the necessity to water the fields at night and the scarcity of labour at night, I would request the Government to go slow. By that I mean that pumpsets need not be given to such places where water can be easily found at a low level. Only in places where water is found at a very deep level and where bulls cannot be used, pumpsets must be given. Otherwise, we will be facing a great consequence by way of unemployment for bulls and men very soon. 4-30 p.m.

Now, mainly I want to deal with the risks involved in using electricity. First of all, I would request the Government to see that they provide all their servants with necessary safeguards. We have heard of accidents, tragic accidents, where men working on overhead wires—some of our own brothers—had become martyrs in public service. I would like to know whether the Government, through the Electricity Board, have provided the necessary safeguards, necessary equipment to them, whether the servants have got necessary instructions to take these things with them when they go for such work, whether simultaneous work by two persons at two posts is allowed, and how this tragic accident occurred, especially to poor brothers when they were doing service to humanity.

Again, in the mufassal, I had occasion to receive notice when first the electric lights were installed, that the owner of the house should see that these wires were renewed every five years at their cost so that no risk might occur. Whether the Electricity Board enforces this in the mufassal towns or in the City is a point for examination.

Again, I hear of cheap materials like switches and other things which easily break and cause accidents, flooding the market. What action has the Electricity Board taken or proposes to take to see that only proper materials which would not at all cause leakage of current are sold in the market?

Now, when I went to Srirangam, I saw a whole street, what is called the Mahatma Gandhi street, from Tiruvanaikaval to Srirangam, replete with fluorescent bulbs. Some years ago I had occasion to read in the newspapers that these fluorescent bulbs contained matter called byrelium which is deadly poisonous. It was stated then in the papers that if a bulb fused and was thrown out and got broken, a small piece of it if stuck to a man's foot, would create more poison than what a cobra would create by biting and that the man would die instantaneously. Have the Electricity Board and the Government gone into the question whether these electric bulbs, when they get fused and are thrown out, are not risky to men's lives? Is it not in the hands of the Electricity Board to ban the supply of electricity where there fluorescent bulls are used, not to speak of the owners of houses who use these fluorescent bulbs in their houses. This can be done in the case of public lights easily.

Then, with regard to the risk to birds, we see a number of transformers in the City and I do not know whether the Electricity Board can provide anything to see that these crows do not sit upon the live wires and lose their lives. Many of the accidents occur because the transformers are open. Of course, there is a danger board there. Men know that it is dangerous. But, for about ten days in the month crows sit on the live wires and lose their lives. Cannot the Electricity Board protect them in this land of Ahimsa by wrapping them with some materials so that even if the crows sit on them, they may not be electrocuted?

From the point of view of the consumer, here the recent rate is 29 nP. per unit. Now I plead for a reduction of that rate. Pre viously, with the higher number of units consumed, a consumer had to pay at lesser rates. There was a slab for fans and other things. Now I think, according to the present rules, we have got only a concession for power lines. But what about houses which do not have power lines? As the hon. Member Mr. Srinivasavaradan pointed out, some of the low-paid employees like bill collectors and supervisors should be paid on a par with Non-gazetted officers. At the same time, I plead for the reduction of the rate for the consumer. I say it is possible. I request the Government and the

23rd August 1961] [Sri G. Krishnamoorthy]

Electricity Board to examine a scheme by which they can encourage the city and urban people to use more electricity by giving a concessional rate over 20 or 30 units, as is the case in the Mysore State. With these few words, Sir, I resume my seat.

SRI A. GAJAPATHY NAYAGAR : மன்றத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல முறையில் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக அமைச்சரைப் பாராட்டுகிறேன். அதைப் பயன்படுத்துவதில் பல கஷ்டங்கள் வருகின்றன. அதை நாம் சரிப்படுத்த வேண்டும். நாம் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறோம். அப்பெண்டிக்ஸில் 24-வது பக்கத்தில் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதை மொத்தமாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர, மாவட்டங்கள் தோறும் தாலுக்கா தோறும், கிராமங்கள் தோறும் கொஞ்சம் விவரமாகச் சொல்லியிருந்தால், ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு பம்பு செட்டு போட்டிருக்கிறது, எவ்வளவு விளக்கு எரிகிறது என்று நமக்குத் தெரிந்தால்தான், நாம் செல்லும் கிராமங்களில் அரசாங்கம் இன்னின்னது உங்களுக்குச் செய்திருக்கிறது என்று விளக்குவதற்கு முடியும். அப்படியில்லாமல் மொத்தமாகப் போட்டிருப்பதால், ஒன்றும் தெரியாமல் இருக்கிறது. அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, நமது பம்புசெட்டுகள் பொறுத்த வரையில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு கிராமத்தில் 75 பம்புசெட்டு இருந்தால் அந்த நிலம் எப்படி இருக்கிறதென்று பார்க்கவேண்டும். கிராமப்புறங்களில் பம்பு செட்டுகளை ஓட்டுவதற்கு டெக்னிகல் ஆள் கிடையாது. அதனால் பம்பு அடிக்கடி கெட்டுப்போகிறது. அதைப் பழுது பார்க்க ஆளைத் தேடிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. அதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால், அரசாங்கத்தார் 75 பம்பு செட்டுகள் இருக்கும் இடங்களில் ஒரு வொர்க் ஷாப் வைத்து, எங்கெங்கு குறையிருக்கிறதோ, பழுது ஏற்பட்டுவிட்டதோ, அதை உடனே தீர்த்து வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் இந்தக் கஷ்டம் தீருமென்பது என் அபிப்ராயம். அடுத்தபடியாக, பியூஸ் கெட்டுப்போகிறது. மேல் அதிகாரிகள் ஜீப் போட்டுக்கொண்டு போகிறார்கள். பத்து மைலில் இருந்துகொண்டு அவர்களுக்குக் கீழுள்ளவர்களைப் போகச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். அவர்களுக்கு சைகிள் கிடையாது. நடந்துதான் போகவேண்டும். அதுவும் முடியாது சில இடங்களில். அதனால் சோம்பேறியாக இருந்தால் போகாமலேயே பஸ்ஸில் இடம் இல்லை என்று நின்றுவிடுவார்கள். ஆகையால், அவர்கள் போவதற்கு வேண்டிய வசதிகள் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். நன்றாக வேலை நடக்கவேண்டுமென்றால் கீழே வேலை செய்கிறவர்களைத் தட்டிக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு சைகிள் கொடுக்க வேண்டும்,

[Sri A. Gajapathy Nayagar] [23rd August 1961

பூணிபாரம் கொடுக்கவேண்டும். திறமை வேண்டுமென்று சொல்லும்போது அதற்காகச் சில சலுகைகளை அளிக்கத்தான் வேண்டும்.

4-40 p.m. மேலும், எலக்ட்ரிசிடி டிபார்ட்மெண்டில் உள்ள ஸ்டாப்புக்குச் சம்பளம் குறைவு. அவர்களுக்கு அதிகமாகச் செலவு செய்யலாம். சலுகை காட்டலாம். அதாவது அவர்கள் எலக்ட்ரிசிடி பீஸ் கட்ட வேண்டியதில்லை என்று சொல்லலாம். அம்மாதிரி சில செய்தால் அவர்கள் நம்மிடம் கை நீட்டாமல் இருப்பார்கள். இப்போது அவர்கள் அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இதை கீழே இருக்கிறவன் பண்ணுகிறான். அதனால் நாம் அவனுக்குச் சலுகை கொடுக்கவேண்டும். அப்போதுதான் மன அமைதியோடு வேலை செய்ய நினைப்பான் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இப்போது பம்புசெட்டு வைக்கவேண்டுமென்றால், ஸ்டார்ட்டர்கள், ஸ்விச்சுகள் வேண்டும். அவைகளால்தான் மோட்டார் ஓட வேண்டியிருக்கிறது. 1950-க்கு முன்பு 48 ரூபாயுக்கு விற்றது இப்போது 300 ரூபாயுக்கு விற்கிறது. அதுபோல 15 எச்.பி. சாமான் 15 ரூபாயுக்கு அப்போது விற்றது இப்போது ரூ. 60 ஆக இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது மின்சாரம் உபயோகிக்கும் விவசாயி என்ன செய்வான் என்று யோசித்துப்பார்க்கவேண்டும். எவ்வளவு செலவு செய்தாலும் கஷ்டங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தில் எவ்வளவோ செய்கிறார்கள். நாம் ஒரு வேலை செய்தால் திருந்தச் செய்யவேண்டும். கூடியவரை நன்றாகச் செய்யவேண்டும். அது இல்லாததால்தான் இவ்வளவு மனக்கசப்பு ஏற்படுகிறது. போர்டு வைத்தோம். எதற்கு? அது கமர்சியலாக இருக்கும், தாமதமாக நடந்த காரியங்கள் சுலபமாக முடியும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகையால் விவசாயி போர்டை விரும்பும்படி செய்யவேண்டும். சாமான்கள் வெளியில் வாங்குவது கஷ்டமாகவும் கிடைக்காமலும் இருக்கிறது. அதனால் இந்த இந்த டிபார்ட்மெண்டே ஸ்டார்ட்டர், ஸ்விட்சுகள் போன்ற சாமான்களை வாங்கி விவசாயிகளுக்குக் கஷ்டமில்லாமல் குறைந்த விலைக்கு ஏன் விற்கக்கூடாது? கிராமங்களில் போடுகிற ஸ்டார்ட்டர்கள், ஸ்விச்சுகள் எல்லாம் திருட்டுப்போகின்றன. மீண்டும் திருட்டுக் கொடுத்தவன் திருடியவனிடத்தில் போய் அந்த சாமானை விலைகொடுத்து வாங்கிப்போடவேண்டியிருக்கிறது. அதனால் முக்கிய சாமான்களை வாங்கி டிபார்ட்மெண்டே விற்க வேண்டும்.

அடுத்தபடியாக, நமது போர்டுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு சம்பந்தம் இருக்க வேண்டும். மேலும் அரசாங்க மின்சார சீப் இஞ்சினியர் முதல் கிரேடு என்று இருக்கிறது. இரண்டாவது கிரேடாக எலக்ட்ரிசிடி இன்ஸ்பெக்டர்; மூன்றாவது அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் என்பவர் இருக்கிறார். இப்போது சீப் இஞ்சினியர் ரிடையர் ஆகி 9 மாதமாகிறது. இரண்டாவதாக உள்ளது அரசாங்க எலக்ட்ரிசிடி இன்ஸ்பெக்டர். அவர் மாரடைப்பால்

23rd August 1961] [Sri A. Gajapathy Nayagar]

இறந்து ஆறு மாதமாகிறது. இப்போது அதையெல்லாம் பார்ப்பவர் அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர். அவர் மாதத்திற்கு 20 நாட்கள் சுற்றிக்கொண்டே இருக்கிறார். முக்கியமாக எலக்ட்ரிசிடி ஆக்ட் செயல்படுத்தப்படுகிறதா என்று அவர் மேற்பார்வை பார்ப்பார். அவர் ஒருவர் மட்டும் என்ன செய்யமுடியும்? ஆகவே உடனடியாக ஆபீசர்களைப் போட்டு அதைக் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக ஆபீசர்களை மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை மாற்றவேண்டும். ஒரே இடத்தில் வைத்திருந்தால் சில கஷ்டங்கள் வருகின்றன. ஆகையால் மதுரையிலாவது, வெளியூரிலாவது உள்ள ஆபீசர்களை ஆறு வருஷம், எட்டு வருஷம், பத்து வருஷம் என்று வைத்திருக்காமல் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை மாற்றினால்தான் வேலை சரியாக நடக்கும்.

அடுத்தபடியாக, இண்டஸ்ட்ரீசுக்கு சப்ளை செய்வது குறைவாக இருக்கிறது. Accessories இல்லையென்று சொல்லுகிறார்கள். சாமான்கள் தட்டுப்பாடு இருப்பதால் முன்னேற்றம் தடைபடுகிறது. ஆகையால் கார்ப்பரேஷனே சாமான்களை வாங்கி மக்களுக்குக் கொடுக்க வழி செய்யவேண்டும். ஒரு சில இடங்களில் வயர் போட்டிருக்கிறார்கள். ஆனால் விளக்கு எரியவில்லையென்றால், என்ன காரணம் என்று பார்க்கவேண்டும். வயர்களை இணைப்பது சரியாக இருப்பதில்லை. அதைப் பார்க்க வந்து ஊசி குத்திப் பார்த்து மூன்று நாள் கழித்து கனெக்ஷன் சரியில்லை என்று சொல்கிறார்கள். ஏன் அப்படி இருக்கிறது என்றால், சாமான்கள் சரியான சாமான்களாக இல்லாததுதான் காரணம். நாம் நல்ல சாமான்களை செய்யவும் வழியில்லை. வெளியிலிருந்து நல்ல சாமான்களை வாங்கவும் வழியில்லாவிட்டால் எப்படி வேலை நடக்கும்? ஆகையால், இதற்கு யாரைக் குறை சொல்வது என்று தெரியவில்லை. இந்தக் குறைகளை எல்லாம் கனம் திரு. ராமையா அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

* **SRI T. V. DEVARAJA MUDALIAR**: மன்றத் தலைவரவர்களே இந்த மின்சக்தி இலாகா பட்ஜட் இங்கே வந்திருப்பதை முழு மனதுடன் ஆதரிக்கிறேன் என்பதை முதன் முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மின்சக்தி முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது என்பதை சபையிலுள்ள அத்தனை பேர்களும் பாராட்டியிருக்கிறார்கள். நானும் பாராட்டுரை கொடுக்கத்தான் முன்வந்திருக்கிறேன். வளர்ச்சியிலே நல்ல வளர்ச்சி வேண்டும். ஓரெட்டில் வளராத பிள்ளையும், ஈரெட்டில் பெறாத கல்வியும், மூவெட்டில் பெறாத பிள்ளையும், நாலெட்டில் அனுபவிக்காத இன்பமும், ஐயெட்டில் பெறாத செல்வமும், ஆறெட்டில் பெறாத ஞானமும், ஏழெட்டில் பெறாத மோட்சமும், எட்டெட்டில் பெறாத புகழும் புகழுக்கு அருகதை அல்ல என்று சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். எட்டு வயதில் வளர்ச்சி அடைய வேண்டும். பதினாறு வயதுக்குள் கல்வி பெற வேண்டும். அறுபத்திநான்கு வயதுக்குள் புகழ் பெற வேண்டும். அதைப்போல் நல்ல வளர்ச்சி இருக்க

[Sri T. V. Devaraja Mudaliar] [23rd August 1961

வேண்டும். நமக்கு நல்ல மின்சக்தி உறக்கமின்றி பணியாற்றிக் கொண்டு வருகிறது. இதற்கு உதவி செய்தவர்களைப் பாராட்ட வேண்டியதாக இருக்கிறது. ரஷியாவும், கனடாவும் நல்ல உதவி யளிக்க முன்வந்திருக்கிறது. கனடாவிலிருந்து எஞ்சினீர்கள் வந்துகூட இருந்து ஒத்தாசை செய்தார்கள். அவர்களுக்கு நன்றி
4-50 p.m. சொல்லவேண்டி இருக்கிறது. நம் சீப் எஞ்சினீர் அந்நிய நாடு செல்ல வேண்டியதாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் உடனடி யாக அனுப்பி வைத்து இன்னும் எப்படி முன்னேற்றம் அடைய லாம் என்று பார்த்து, அடுத்த 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று சர்க்காரும் சர்க்காரில் பணியாற்றுகிறவர்களும் ஒரு உன்னதமான எண்ணம் கொண்டிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதற்குத் தக்க முயற்சி எடுக்க வேண்டும். முயற்சி திருவினை யாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டு முயற்சி எடுத்து சீப் எஞ்சினிரை அந்நிய நாட்டுக்கு மறு முறையும் அனுப்பிவைத்து அதற்குப் பொருள் உதவியும் செய்யவேண்டும். இப்போது சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஸ்ரீ கஜபதி நாயகர் அவர்கள் சாமான் இல்லை, அது இல்லை, இது இல்லை என்று. அந்நிய நாட்டுக் குப் போய், பல சாமான்களைக் கொண்டுவந்து மின்சக்தியை முன்னேற்றம் செய்ய அமைச்சர் அவர்கள் அவரை அனுப்பி வைத்து உடனடியாக சாமான்கள் கொண்டுவந்து குக்கிராமங் களுக்குக்கூட மின்சக்தி வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல், மின்சக்தி வழிபாடு எப்படி இருக்கிறது என்றால், உறக்கம் இன்றிப் பணியாற்றுவது அது. சூரியன், சந்திரன், காற்றுதான் உறக்கம் இன்றிப் பணியாற்றுகிறது. பூமி, தண்ணீருக்குக்கூட உறக்கம் இருக்கிறது. மற்ற அனைவருக்கும் இருக்கிறது. மின் சக்திக்கு உறக்கம் இல்லை என்று சொன்னால் மிகையாகாது. மந்திரி இராமையா அவர்களும் உறக்கம் இன்றிப் பணியாற்றுவதற்கு அவரையும் நாம் பாராட்டவேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேட்டூரில் தண்ணீர் குறைவாக இருந்தபோது, "கட்" என்றவுடன் மனதில் "தட்" என்று இருந்தது. ஒரு வாரத்தில் பூர்த்தி அடைந்து விட்டது. தட்டு இல்லாமல் போய்விட்டால் அது மனதில் சந்தோ ஷத்தை உண்டு பண்ணுகிறது. தட்டுவராமல் இருக்க முயற்சி எடுக்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அந்த வழியில் கரண்ட் முன்னேற்றம் அடைய வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல், இப்போது விவசாயிகளுக்குக் குதிரைக்கு 50 ரூபாய் என்று போடுகிறார்கள். அதைச் சில ஜில்லாக்களில் குறைத்திருக்கிறார்கள். சில ஜில்லாக்களில் குறைக்காமல் இருக்கி றார்கள். அந்த இடங்களிலும் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் வேறு விதங்களில்

23rd August 1961] [Sri T. V. Devaraja Mudaliar]

தண்ணீர் பாய்ச்சிக் கொண்டாலும், குதிரைக்கு 50 ரூபாய் கட்டியாக வேண்டும் என்று உத்தரவு போடுகிறார்கள். மோட்டாரில் கரண்ட் எடுக்காமல் இருந்தாலும் பணம் கட்டவேண்டுமென்று இருக்கிறது. அதற்கு ஏதாவது வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல், நல்ல முன்னேற்றம் அடைவதில் ஒற்றுமை வேண்டும். ஜனங்களும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். காவிரி நதி பாய்கிற இடங்களில் நெல் உற்பத்தியாகிறது. அதிகமாக ஆகிறது. அதற்கு அடுத்தாற்போல் எங்கே இருக்கிறது என்றால், வட ஆற்காட்டில் நெல் உற்பத்தி அதிகம் என்று சொன்னால், மிகையாகாது. அது எதனால் என்றால் மின்சக்தியால்தான். ஆறு, கால்வாய், நீர்த்தேக்கம் ஒன்றும் அங்கே இல்லை. இல்லாவிட்டாலும் மின்சக்தியால் நாங்கள் கிணறுகளுக்கு பம்ப்செட் வைத்து, அதனால் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். இப்போது காவிரி நதி தீர்த்தத்துக்கு அடுத்தாற்போல் எங்கே நெல் உற்பத்தி அதிகம் என்றால் வட ஆற்காடு ஜில்லாவில்தான் என்று புள்ளிவிவரங்கள்கூட கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மின்சக்தி கட் இல்லாமல் இருந்தால்தான் விவசாயிகள் முன்னேற்றம் அடைய முடியும் என்று சொல்லிக் கொண்டு எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

